முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.
2025–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை

I.A.No.3/2024
in
Probate Original Petition No.79/2019

ஜி.தவமணி ... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

1. சுந்தர்ராஜன்

2. ரேவதி .... எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்

இந்த மனு 01.02.2025ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.K. சுருளிவேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.அசோக் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

உத்தரவு

மனுதாரர் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறு திறப்பு செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–

மனு சொத்தைப் பொறுத்து உயிலை மெய்ப்பிதழ் (Probate) செய்யக்கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் ஏற்கனவே ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். உயில் சாசனம் ம.சா.ஆ.1

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. உயில் சாசனத்தில் சான்றொப்பம் செய்த வழக்கறிஞர் திரு.மணிகண்டன் என்பவரை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி உள்ளது. மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறு திறப்பு செய்ய வேண்டும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>முதல் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2–ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின் வருமாறு :–</u>

மனு சட்டப்படியும், பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். உயிலில் சான்றொப்பம் செய்தவர் ஏற்கனவே ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். திரு.மணிகண்டன் என்பவரை ஏற்கனவே சாட்சியாக விசாரணை செய்யவில்லை. மனுதாரருக்கு ஏற்கனவே போதிய வாய்ப்பும், போதிய சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட பிறகு மனு தாக்கல் செய்ய இயலாது. மனுவானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோது இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்:–</u>

5. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. தீர்வு:–

மனுதாரர் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறு திறப்பு செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பில் திரு.மணிகண்டன் என்பவரை சாட்சியாக விசாரிக்க வேண்டி உள்ளதால் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறு திறப்பு செய்ய வேண்டும் என

கூறப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவானது இருதரப்பு சாட்சியம் முடிந்த பிறகு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோது இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு விசாரணையை கால தாமதப்படுத்த வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டது.

8. விசாரணை நீதிமன்றம் வழக்கின் இரு தரப்பினருக்கும் சாட்சிகளை விசாரணை செய்ய போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. நீதியின் நலன் கருதி மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியாக வழக்கறிஞர் திரு.மணிகண்டன் என்பவரை சாட்சியாக விசாரணை செய்ய மற்றொரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது. அதே சமயம் மனு கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் செலவு தொகையின் பேரில் மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்கண்ட பரிசீலனைகளின்படி இந்த மனு செலவு தொகையின் பேரில் அனுமதிக்கத்தக்கது என பிரச்சனையின் மீது தீர்வு காணப்படுகிறது.

9. முடிவில், மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர் செலவு தொகையாக ரூ.1000/- யை 13.03.2025 தேதியோ அல்லது அதற்கு முன்போ செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சம் மனு தானாகவே தள்ளுபடி ஆகி விடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா 14.03.2025

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ஆம்

ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RAMAKRISHNAN

Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2025.02.20 01:45:01 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

N RAMAKRISHNAN

Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2025.02.20 01:45:09 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.